Crl.Misc/ 39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar Case No. CC. 41/2019

Miscellaneous

Preliminary Register

Deposition of PW-1 LW-2 /

| Name | : | ஜெயசீலன் | Father Name | : | சுப்ரமணியன் |
|---|---|---|---|---|---|
| Village | : | | Taluk | : | தஞ்சாவூர் |
| Caste | : | | Calling | : | தஞ்சாவூர் CS(CID)<br>தலைமைக் காவலர் |
| Religion | : | | Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02nd March day of 2026.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் ச/பி.355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை

**முதல் விசாரணை** -

நான் தற்போது மதுவிலக்கு அமல்பிரிவு, நன்னிலம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.02.2019 ம் தேதி 09.00 மணியளவில் நானும் என்னுடன் பணிபுரிந்த தலைமைக் காவலர் ராஜசங்கர் என்பவரும் வலங்கைமான், ஆய்வாளர் திருமதி. ஞானசுமதி அழைத்ததின் பேரில் மதுவிலக்கு சம்பந்தமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகில் நின்றுகொண்டிருந்த எதிரியை விசாரித்து சோதனை செய்தபோது சுமார் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடங்களில் தலா 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் மற்றும் பனங்கள் விற்ற பணம் ரூ.100/-ம் மறைத்து வைத்திருந்தார். அவ்வாறு வைத்திருப்பதற்கும், விற்பதற்கும் உரிமமோ, அனுமதியோ அவரிடம் இல்லை. எனவே குற்ற காரணம் கூறி அவரை ஆய்வாளர் கைது செய்தார். தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் எதிரி வைத்திருந்த

வழக்கு தடயத்தை மகசரில் ஆய்வாளர் கைப்பற்றினார். அதில் நாங்கள் இருவரும் உடனிருந்து சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் 10.00 மணியளவில் வழக்கு தடயத்தை பாதுகாப்பான முறையில் கொட்டி அழித்து அழிப்பு மகசர் தயார் செய்தார். அதில் நாங்கள் இருவரும் உடனிருந்து சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். அழிப்பு மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் **அ.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரிமீது வலங்கைமான் காவல் நிலைய குற்ற எண். 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். ஆய்வாளர் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** -

சம்பவயிடத்தில் பொதுமக்கள் இருந்தனரா என்றால் இருந்தார்கள் எங்களை கண்டதும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். சம்பவயிடத்திற்கு யார் யார் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் ஆய்வாளர் ஜீப்பிலும் நானும் ராஜசங்கர் என்பவரும் ஆய்வாளருடன் சென்றோம். எதிரியை கைது செய்து மேற்படி ஜீப்பில்தான் அழைத்துவந்தோம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் என்னென்ன தடயப்பொருள்கள் இருந்தது என்றால் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடத்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் 1 பிளாஸ்டிக் கப்பும் மற்றும் பணம் ரூபாய். 100ம் இருந்தது. தடயப்பொருளான கள்ளை அங்கேயே கொட்டி அழித்துவிட்டோம் என்றால் சரிதான். அதனை புகைப்படமோ வீடியோவோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பனங்கள்ளை மாதிரிக்கும் எடுக்கவில்லை, வேதியியல் பகுப்பாய்விற்கும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி பகுப்பாய்விற்கு அனுப்பினால்தான் அது கள்ளா என்ற விபரம் தெரியவரும்

என்றால் இல்லை நுகர்ந்து பார்த்து அது கள்ளா என்று கூறிவிடலாம். நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்ட தடயப்பொருட்களான பிளாஸ் குடம் மற்றும் பிளாஸ்டிக் கப் ஆகியவை சாதாரணமாக கடையில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எவ்வித தடயப்பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு எதிரிமீது பதிவு செய்யப்பட்ட பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2026.03.02 12:41:48 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 41/2019**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஞானசுமதி | Husband Name | : | பாஸ்கர் |
| Village | : | | Taluk | : | திருச்சி |
| Caste | : | | Calling | : | திருச்சி பொருளாதார குற்றப்பிரிவு- ஆய்வாளர் |
| Religion | : | | Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 02nd day of March 2026.

எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் ச/பி.355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை

**முதல் விசாரணை-**

நான் தற்போது திருச்சி பொருளாதார குற்றப்பிரிவில் ஆய்வாளராக ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.02.2019 ம் தேதி 09.00 மணியளவில் நன்னிலம் மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணியிலிருந்த போது நானும் தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்களுடன் மது விலக்கு சம்மந்தமாக வலங்கைமான் காவல் சரகத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போது அவிச்சாகுடி சுள்ளாரு பனந்தோப்பு அருகில்

நின்றுக்கொண்டிருந்த எதிரி எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை வளைத்து பிடித்து விசாரிக்க அவர் தனது பெயர் மற்றும் முகவரியை கூறினார். அவரை நான் சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்து அவர் நின்ற இடத்தை சோதனை செய்தபோது அவர் நின்ற இடத்தில் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடத்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் 1 பிளாஸ்டிக் கப்பும் மற்றும் பணம் ரூபாய். 100ம் வைத்திருந்தார். நான் அவ்வாறு அவர் வைத்திருப்பதற்கும் விற்பதற்கும் அரசு அனுமதியோ உரிமமோ உள்ளதா என்று கேட்ட போது எதிரி அவ்வாறு அனுமதியும் உரிமமோ இல்லை என்று கூறினார். எனவே நான் எதிரியை குற்ற காரணம் கூறி கைது செய்து அவர் வைத்திருந்த 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடத்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளை தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து கைப்பற்றியும் சாராயத்தை பிரிவு 32 TNP Act ன் படி சம்பவயிடத்திலேயே கொட்டி அழித்தும் அழிப்பு மகசர் தயார் செய்தேன். கைப்பற்றுதல் மகசரிலும் அழிப்பு மகசரிலும் தலைமைக் காவலர்கள் ராஜசங்கர் மற்றும் ஜெயசீலன்ஆகியோர்களிடம் சாட்சிகளாக கையொப்பம் பெற்றேன். மேற்படி கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் முறையே **அ.த.சா.ஆ.3** மற்றும் **அ.த.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலையக் குற்ற எண் 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். ( முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது). என்னுடன் பணியிலிருந்த ராஜசங்கள் மற்றும் ஜெயசீலன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வழக்கு தடயத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ.6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற எண். 164/2019, U/Sec.4(1)(aaa), 4(1)(i) TNP Act ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

இவ்வழக்கில் புகார்தாரரும் விசாரணை அதிகாரியும் நான்தான் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் பொதுமக்கள் இருந்தனரா என்றால் இருந்தார்கள் எங்களை கண்டதும் அங்கிருந்து ஓடிவிட்டார்கள். சம்பவயிடத்திற்கு யார் யார் எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் நானும் அ.சா.1 ம் ஜீப்பில் சென்றோம். எதிரியை கைது செய்து மேற்படி ஜீப்பில்தான் அழைத்துவந்தோம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் என்னென்ன தடயப்பொருள்கள் இருந்தது என்றால் 20 லிட்டர் பிடிக்கக்கூடிய 6 பிளாஸ்டிக் குடித்தில் 18 லிட்டர் வீதம் 108 லிட்டர் பனங்கள்ளும் 1 பிளாஸ்டிக் கப்பும் மற்றும் பணம் ரூபாய். 100ம் இருந்தது. தடயப்பொருளான கள்ளை அங்கேயே கொட்டி அழித்துவிட்டோம் என்றால் சரிதான். அதனை புகைப்படமோ வீடியோவோ பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி பனங்கள்ளை மாதிரிக்கும் எடுக்கவில்லை, வேதியியல் பகுப்பாய்விற்கும் அனுப்பவில்லை என்றால் சரிதான். மேற்படி பகுப்பாய்விற்கு அனுப்பினால்தான் அது கள்ளா என்ற விபரம் தெரியவரும் என்றால் இல்லை நுகர்ந்து பார்த்து அது கள்ளா என்று கூறிவிடலாம். நீதிமன்றத்தில் ஒப்படைக்கபட்ட தடயப்பொருட்களான பிளாஸ் குடம் மற்றும் பிளாஸ்டிக் கப் ஆகியவை சாதாரணமாக கடையில் கிடைக்கக்கூடிய பொருள் என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழிப்பு மகசர் ஆகியவை காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்யப்பட்டது என்றால் சரிதான் CCTNS ல் பதிவேற்றம் செய்யவேண்டியிருப்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன். TNP Act ச/பி.32ன் படி நான் அழிப்பு மகசர் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவயிடம் செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எவ்வித தடயப்பொருளும் கைப்பற்றபடவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு எதிரிமீது பதிவு செய்யப்பட்ட பொய்வழக்கிற்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க புள்ளிவிபர கணக்கிற்காக எதிரிமீது பதிவு செய்யப்பட்ட

பொய்வழக்கு என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2026.03.02 12:41:57 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.